අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

## சைவநெறி

### புள்ளியிடும் திட்டம்




தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது | All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டு

**கல்வி அமைச்சு** | 12 | T | I,II

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

## புள்ளி வழங்கும் திட்டம்

### சைவநெறி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | **1** | 11. | **1** | 21. | **4** | 31. | **2** |
| 02. | **4** | 12. | **3** | 22. | **1** | 32. | **4** |
| 03. | **3** | 13. | **4** | 23. | **3** | 33. | **1** |
| 04. | **2** | 14. | **2** | 24. | **2** | 34. | **3** |
| 05. | **4** | 15. | **1** | 25. | **1** | 35. | **2** |
| 06. | **1** | 16. | **3** | 26. | **3** | 36. | **4** |
| 07. | **2** | 17. | **1** | 27. | **4** | 37. | **3** |
| 08. | **3** | 18. | **4** | 28. | **2** | 38. | **1** |
| 09. | **2** | 19. | **2** | 29. | **3** | 39. | **4** |
| 10. | **4** | 20. | **3** | 30. | **1** | 40. | **2** |

### சைவநெறி - II

1.

i. திருக்குட முழுக்கு, பெருஞ் சாந்தி

ii. கதிர்காமம், திருகோணமலை, நல்லூர், கந்தவனக்கடவை

iii. திருஞானசம்பந்த மூரத்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார்

iv. பூதவுடலை தகனம் செய்து சாம்பலை விதிமுறைப்படி சேகரித்து அதை புண்ணிய நீர் நிலையில் கரைத்து விடுதல்

v. தூல பஞ்சாட்சரம் - நமசிவாய
சூக்கும் பஞ்சாட்சரம் - சிவாயநம

vi. இராகு, கேது

vii. மற்றவர்கள் மேல் அன்பு பாராட்டி அரவணைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்தல்

viii. விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர்

ix. உமாதேவியார் பூமியிலே மானிடப் பெண்ணாக பிறந்து தவம் செய்து சிவபிரானை திருமணம் செய்து இருவரும் யானை வடிவம் பெற்று விநாயகரை ஈன்றருளியமை.
கஜமுகாசுரனை விநாயகர் தம் தந்தங்களுள் ஒன்றை முறித்து குத்த வீழ்ந்த கஜமுகாசுரன் மூசியமாக உருமாறி தாக்கவர விநாயகர் அதனை வாகனமாக மாற்றிக் கொண்டமை.
ஆவணி விநாயக சதுர்த்தி விரதத்தை நோற்ற தேவர்களின் முன் விநாயகர் நடனமாட அதனைப் பார்த்து சிரித்த சந்திரனுக்கு விநாயகர் சாபம் இட்டமை.

x. வீட்டையும், சுற்றுப் புறத்தையும் தூய்மைப்படுத்தல்.
வீட்டைக் கழுவுதலும், பெருக்குதலும்.
தோரணங்கள், கோலங்களால் அலங்கரித்தல்.
நீராடிப் புதிய ஆடை தரித்தல்.
புதிய பாத்திரத்தில் உணவை சமைத்தல்.
இறைவனுக்கு நிவேதனமாக்கல்.
உறவினர் விருந்தினருடன் கூடி உண்ணல்.

(10X2 = 20 புள்ளிகள்)

*2.*

அ.

i. திருச்சிற்றம்பலம்.
குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால் வெண் நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொன்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே.
திருச்சிற்றம்பலம்.

ii. வளைந்த புருவங்களையும் கொவ்வைப் பழம் போன்ற வாயில் புன்சிரிப்பையும் குளிர்ச்சியான சடையினையும் பவளம் போன்ற மெனியில் பால் போன்ற வெண்ணீற்றையும் பேரின்பத்தை தருகின்றதும் பொன்மயமானதுமான தூக்கிய திருவடியையும் காணும் பேறு கிடைத்தால் மனிதப் பிறவியும் வேண்டியதேயாகும்.

ஆ.

i. திருச்சிற்றம்பலம்.
அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன் தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்கு உன்தன் வன்மை கண்டி அடியேன்
எந்தை நீ எனை நமன் தமர் நலியின்
இவன் மற்(று) என் இடியான் என விலக்கும்
சிந்தையில் வந்து உன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன்கூர் உளானே.
திருச்சிற்றம்பலம்.

ii. செழிப்பான சோலைகள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானே உன்னை அடைக்கலமாக அடைந்த அந்தணனைக் காப்பதற்காக அவனது உயிரை எடுத்து உன்னுடைய அந்த பெருந்தன்மை வாய்ந்த குணத்தைக் கண்டு என் தந்தையாகிய நீ இயம தூதர்கள் வந்து கிற வேளையிலும் இவன் என் அடியவன் என்று தடுப்பாய் என்ற நம்பிக்கையில் உனக்கு அடிமையாக உன் திருவடியை வந்தடைந்தேன்.

இ.

i. திருச்சிற்றம்பலம்.
பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.
திருச்சிற்றம்பலம்.

ii. பாலகன் பால்வேண்டி அழுதபோது அவனுக்கு திருப்பாற் கடலையே அழைத்து உண்ணக் கொடுத்த பெருமாலும் திருமாலுக்குச் சக்கரப் படையைக் கொடுத்தருளிய பெருமாலும் நிலை பெற்ற தில்லை எனும் திருப்பதியில் வேதங்களை இடையறாது ஓதுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற தில்லை சிற்றம்பலத்தையே தனது இடமாகக் கொண்டு ஆனந்த தாண்டவம் ஆடுபவனும் ஆகிய சிவபெருமானை போற்றி புகழ்ந்து 'பல்லாண்டு வாழ்க' என வாழ்த்துவோமாக.

ஈ.

i. திருச்சிற்றம்பலம்

யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே.

திருச்சிற்றம்பலம்

ii. இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டு அவரை வணங்குவதல் யாவருக்கும் இலகுவாகச் செய்யக்கூடிய புண்ணிய செயலாகும். பசுவுக்கு ஒரு பிடி புல்லைக் கொடுத்தல் யாவருக்கும் செய்யக்கூடிய நற்செயலாகும். பசித்து வந்தோர்க்கு இன்னார் இன்னார் என்று பாராமல் ஒரு பிடி உணவு கொடுத்தல் யாவரும் இலகவாகச் செய்யக்கூடிய நற்செயலாகும். பிறருடன் இனிய வார்த்தைகளைப் பேசுதல் யாவருக்கும் இலகுாச் செய்யக்கூடிய நற்செயல் ஆகும்.

உ.

i.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவி நின்று
காக்கும் கருணைக் கடலே சகலகலா வல்லியே.

ii. அடியார்களுடைய நாவில் வடமொழி அமைந்த நூல்களாகிய கடலும் நிறைந்து விளங்கும் சிறந்த தமிழ் செல்வமும் நிலைத்து நிற்கும் படியாகக் காத்தருள் செய்கின்ற கருணைக் கடலாகவும் சகல கலைகளுக்கும் அதிபதியாகவும் விளங்கும் கொடியே நூல்களை ஆராய்ந்து பெற்ற துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை நிறைந்த மொழியாற்றலும் பெருகும்படியாக ஆணையிட்டு அருள்வாயாக.

(3+2=5X2= 10 புள்ளிகள்)

*3.*

i. தொன்றுதொட்டு வரும் அறிவு
இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல்

ii. ஆலயக் கிரியை
ஆலய அமைப்பு
வாகன அமைப்பு
தேர் அமைப்பு
ஆசார்ய ஒழுக்கம்

iii. நித்திய கிரியை
நைமித்திய கிரியை
காமிகக் கிரியை
நித்திய கிரியை - நாள் தோறும் நிகழ்வது
ஆறுகாலப் பூசை - உஷக் காலம், காலை சந்தி, உச்சிக் காலம், சாயங் காலம், இரண்டாங் காலம், அர்த்த சாமம்
நைமித்திய கிரியை - நித்திய கிரியைகளில் ஏற்படும் குறைகளை நிறைவேற்ற ஆற்றப்படுவது. மகோற்சவம், கும்பாபிஷேகம்.
காமிகக் கரியை - விருப்பு கருதி ஆற்றப்படுவது. (2+3+5 = 10 புள்ளிகள்)

*4.*

i. நூல் - கந்த புராணம்
பாடியவர் - கச்சியப்ப சிவாச்சாரியார்

ii. முருகப் பெருமான் சூரபன்மனோடு நடந்த போரிலே அழிவெய்திய பூதகணம் முழுவதும் அவ்விடத்துக்கு வரும்படியாக அருள் பாலித்தார். அப் பூதகணம் யாவும் வந்து தம் இனத்தோடு கூடின. முருகப் பெருமான் சமுத்திர ராஜனை நோக்கி சூரபன்மனது மகேந்திர புரியை அழிக்கும்படி கட்டளையிட்டருளினார். சமுத்திர ராஜனும் அவ்வாறே செய்தான்.

iii. - முருகப் பெருமான் மயில் வாகனத்தில் வீற்றிருத்தல்.
- வீரவாக தேவரை அன்போடு அழைத்தல்.
- சூரபன்மனால் சிறையிலே அடைக்கப்பட்ட சயந்தன் முதலான தேவர்களை விடுவித்து வருவாயாக என பணித்தல்.
- சிறை நீக்கிய சயந்தன் முதலான தெவர்களும் தேவமாதர்களும் முருகப் பெருமானை வணங்குதல்.
- பூத கணங்கள் உயிர் பெற்றமை.
- சூரபன்மனது மகேந்திர புரியை அழிக்கும்படி சமுத்திர ராஜனுக்கு கட்டளையிடல்.
- திருச்செந்தூர் திருத்தலத்தை முருகப் பெருமான் அடைதல்.
- திவ்விய சிங்காசனத்தில் வீற்றிருத்தல்.
- முருப் பெருமான் தேவ தச்சனைக் கொண்டு சிறந்ததொரு கோயிலை உருவாக்கி, சிவபிரானை இலிங்கத்தில் எழுந்தருள பண்ணி வழிபடுதல்

(2+3+5 = 10 புள்ளிகள்)

*5.*

i. திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம்

ii. - கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
- ஆலயம் தொழுவது சாலவும் நன்று
- கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்
- கோயிலில்லாவூர் அடவி காடு

iii. - மட்டக்களப்பு மண்முனை கொக்கட்டிச்சோலை கிராமம்
- கொக்கட்டி மரம் நிறைந்த இயற்கை எழில்
- தான்தோன்றீச்சரம்
- பழமையான சிவன் ஆலயம்
- மட்டக்களப்பு மான்மியம்
- உலக நாச்சி ஆலயம் அமைத்தல்
- தரும சிங்க உதவி செய்தல்
- முத்தலிங்கர், கொக்கட்டியார்
- சோழ மன்னரது ஆதரவு
- குளக் கோட்ட மன்னன்
- கலிங்க மகான்
- இறைவன் - தான்தோன்றீஸ்வரன்
- இறைவி - பார்வதி அம்பிகை
- தலவிருட்சம் - கொக்கட்டி
- மிக உயரமான 60 அடி உயர கொடித் தம்பம்
- ஆலய பரிபாலகர் - வண்ணக்கர்
- பூசை செய்பவர் சங்கமர் - வீரசைவ குருமார்
- ஆவணி வளர்பிறை முதலாம் நாள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள்
- தேர்த் திருவிழா - தேரோட்டம்
- திருக் சூகர வேட்டை
- குடுக்கை கூறுதல் - திருவிழாவில் பங்கு கொண்ட அனைவரையும் கௌரவிக்கும் முகமாக குடுக்கை கூறும் கல்வெட்டு படிக்கப்படும்.

(2+3+5 = 10 புள்ளிகள்)

**6.**

i. - முற்றிலும் உணர்தல்
- இயல்பாகவே பாசங்களில் நீங்குதல்
- இயற்கை உணர்வினையாதல்
- வரம்பில் இன்பம் உடையமை
- தன்வயத்தனாதல்
- முடிவில் ஆற்றல் உடையமை
- பேதருள் உடைமை
- தூய உடம்பினையாதல்

ii. - பிரார்த்தம்
- ஆகாமியம்
- சஞ்சிதம்

iii. - முப்பொருட்களில் ஒன்று
- அறிவித்தால் அறியும் அறிவிக்காவிட்டால் அறியமாட்டாது
- பாசங்களால் கட்டுப்பட்டிருக்கும்
- எண்ணற்றவை, நித்தியமானவை
- சகலர், பிரளாயாகவர், விஞ்ஞானகள் என மூவகை
- சார்ந்த தன் வண்ணமானவை
- சத சத்து எனப்படுபவை

(2+3+5 = 10 புள்ளிகள்)

**7.**

அ. - சமண சமயத்தில் இருந்து சைவ சமயத்துக்கு மீண்ட வரலாறு.
- தந்தை - புகழானார்
- தாய் - மாதினியார்
- தமக்கை - திலகவதியார்
- மருணீக்கியார்
- கூற்றாயினவாறு விலக்ககலீர்
- தேவாரம், திருத்தாண்டகம்
- சுண்ணாம்பு அறை - மாசில் வீணையும்
- யானை ஏவி விடப்பட்ட போது - சுண்ண வெண் சந்தனச் சாத்தும் பாம்பு தீண்டிய சிறுவனை
- உயிர்ப்பித்தமை - ஒன்று கொலா மா…….
- கல்லுடன் கட்டி கடலில் போடல் - சொற்றுணை வேதியன்
- சூல இடப இலச்சினை - பொன்னாள் திருவடிக்கு ஒன்றுண்டு
- கதவு திறத்தல் - பண்ணினேர் மொழியாளுமை பங்கரே
- உழவாரப் படையாளி
- கையிலைக் காட்சி - மாதர் பிறைக் கன்னியானை
- சரியை, தாச மார்க்கம்
- சித்திரைச் சதயம்

ஆ. - விநாயகருக்குரிய சிறப்பான விரதம்
- கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை வரை 21 நாட்கள்
- தினமும் இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலானவற்றை நிவேதித்தல்
- முதல் 20 நாட்கள் பகல் ஒரு பொழுது உணவு உண்பர்
- திரிகரண சுத்தியோடு வழிபடுதல்
- 21 வருடங்கள் அனுஷ்டிப்பது சிறப்பு
- பிள்ளையார் கதை படித்தல்

இ. - மேலான பண்பு
- அன்புடைமை

- வாய்மை
- பணிவுடைமை
- அடக்கமுடைமை
- செய்நன்றி மறவாமை
- அன்புடைமை
- "அன்பும் சிவமும் இரண்டென்பர்..."
- "அன்போடு இயைந்த..."
- "செய்க தவம்..."
- வாய்மை

 உண்மை பேசுதல்
 வாய்மை எனப்படுவது
 பொய்மையும் வாய்மை இடத்து
 உள்ளத்தால் பொய்யாது ஒழுகின்
 மனத்தொடு வாய்மை

ஈ. - பெண் தெய்வ வழிபாடு
- இலங்கை முழுவதும் பரந்த வழிபாடு
- இந்துக்கள் மாத்திரமன்றி பௌத்தர்களும் பத்தினி தெய்யோ
- சங்க செய்யுள்
- சிலப்பதிகாரம்
- வீரபத்தினிப் பெண்
- கஜபாகு மன்னன்
- அங்கணாமைகடவை, வற்றாப்பளை
- கண்ணகி வழக்கரை
- சிலம்பு கூறல்
- கோவலாளார் கதை
- வைகாசி மாத பூரணையை ஒட்டிய திங்கட்கிழமையை இறுதியாகக் கொண்டு மடையெடுத்தல், கதவு திறத்தல், குளுர்த்திச் சடங்கு.
- சிலம்பு, உடுக்கு, பறை, குழல்
- வற்றாப்பளை, மட்டுவில், காரைதீவு, செட்டிப்பாளையம்

(5+5 = 10 புள்ளிகள்)